ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1795/29 - 2013 ජනවාරි 30 වැනි බදාදා - 2013.01.30

1795/29 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாகங்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பாக நியதிச் சட்டத்தில் 2 ஆவது பிரிவின் கீழ் நடைபெறுகின்ற விசாரணை

மேல் மாகாணத்தின் முதலமைச்சர் நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், மேல் மாகாண மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பாக நியதிச் சட்டத்தில் 2 (2) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு குறித்தொதுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள்/குற்றச்சாட்டை காரணமாகக் கொண்டு மீரிகம பிரதேச சபை தலைவர் ஆனந்த பிரேமசந்திர ரணவீரவுக்கு நடவடிக்கை எடுக்கும்போது மேலே சொல்லப்பட்ட நியதிச் சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழ் காட்டப்பட்டுள்ள குற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை விசாரணை செய்து மூன்று மாதத்துக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக தனி நபர் விசாரணை சபை ஒன்றிற்காக ஓய்வுபெற்ற மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பீ. எல். கே. விமலச்சந்திர அவர்களை நியமிக்கின்றேன்.

விசாரணை செய்யப்படவேண்டிய விடயங்கள்/குற்றச்சாட்டுக்கள் :

(அ) ஆனந்த பிரேமசந்திர ரணவீர அவர்கள், 2011 ஏப்பிறல் மாதம் 4 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இதுவரைக்கும் கால எல்லைக்குள் மீரிகம பிரதேச சபையில் தலைவராக செயற்பட்டு மீரிகம பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் வளவ்வத்த என்ற இடத்தில் ஆரம்பத்திலிருந்து பிரதான வீதி வரைக்கும் வடிகால் வெட்டுதல் தொடர்பான கைத்தொழில் முறையான விலைமனுக்கோரல் செய்யாமல் பள்ளேவெல, வள்போலன, இலக்கம் 72 இல் வசிக்கும் வை. ஏ. அர்ஜுன தர்மப்பிரிய ஆகிய நபருக்கு ஒப்படைத்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தில் 174 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்பட்டு மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் அல்லது 2 (1) இ பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல் ;

(ஆ) ஆனந்த பிரேமச்சந்திர ரணவீர அவர்கள், 2011, ஏப்பிறல் மாதம் 04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இது வரைக்கும் கால வரையறைக்குள் மீரிகம பிரதேச சபைத் தலைவர் என்ற வகையில் நடவடிக்கையில் ஈடுபட்டு மீரிகம அதிகார பிரதேசத்தினுள் வளவ்வத்த என்ற இடத்தில் ஆரம்பத்திலிருந்து பிரதான வீதிவரையிலான பகுதியில் வடிகால் வெட்டுதல், தொடர்பானதான கைத்தொழில் ஒப்பந்தம் இன்றி பல்லேவல வள்போலன, இலக்கம் 72 இல் வசிக்கும் வை. ஏ. அர்ஜுன தர்மப்பிரிய ஆகிய நபருக்கு ஒப்படைத்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்போது, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் 173 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்பட்டு மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் அல்லது 2 (1) இ பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல் ;

(இ) ஆனந்த பிரேமச்சந்திர ரணவீர அவர்கள் 2011.04.04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இன்று வரைக்குமான கால எல்லைக்குள் மீரிகம பிரதேச சபை தலைவர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கும்போது மீரிகம பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் வளவ்வத்த என்ற இடத்தில் ஆரம்பத்திலிருந்து பிரதான வீதி வரைக்குமான பகுதியில் வடிகால் வெட்டுதல் தொடர்பானதான கைத்தொழில் முறையான சபை உடன்பாடு இன்றி பள்ளேவெல வள்போலான இலக்கம் 72 இல் வசிக்கும் வை. ஏ. அர்ஜுன தர்மப்பிரிய ஆகிய நபருக்கு ஒப்படைத்து நிறைவேற்றுவதற்கு இடமளித்து அது தொடர்பாக மீரிகம பிரதேச சபையின் பொது நிதியில் ரூபா நாற்பத்தி ஏழாயிரத்து அறுநூற்று முப்பது (47,630 ரூபா) அல்லது அதற்கு அண்மித்த நிதியத்தை வழங்கியதன் மூலம் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) ஈ பிரிவில் குறிப்பிட்ட குற்றம் செய்தல் ;

(ஈ) ஆனந்த பிரேமச்சந்திர ரணவீர அவர்கள் 2011.04.04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இன்று வரைக்குமான கால எல்லைக்குள் மீரிகம பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கும்போது மீரிகம பிரதேச சபைக்கு உரிய புதிய புத்தகசாலை அமைக்கின்ற நிலத்தில் மண் பரவுதல் மற்றும் குப்பைகள் நீக்குதல் தொடர்பானதான ஒப்பந்தம் அளித்தல் அழைப்பின்றி பள்ளேவல வள்போலான இலக்கம் 72 இல் வசிக்கும் வை. ஏ. அர்ஜுன தர்மப்பிரிய ஆகிய நபருக்கு ஒப்படைத்து நிறைவேற்றுவதற்கு இடமளித்ததன் மூலம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தில் 174 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்பட்டு மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் அல்லது 2 (1) இ பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல் ;

(உ) ஆனந்த பிரேமச்சந்திர ரணவீர அவர்கள் 2011.04.04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இன்று வரைக்குமான கால எல்லைக்குள் மீரிகம பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கும்போது மீரிகம பிரதேச சபைக்கு உரிய புதிய புத்தகசாலை அமைக்கின்ற நிலத்தில் மண் பரவுதல் மற்றும் குப்பைகள் நீக்குதல் தொடர்பான ஒப்பந்தம் அளித்தல் அழைப்பின்றி பள்ளேவல வள்போலான இலக்கம் 72 இல் வசிக்கும் வை. ஏ. அர்ஜுன தர்மப்பிரிய ஆகிய நபருக்கு ஒப்படைத்து நிறைவேற்றுவதற்கு இடமளிப்பதன் மூலம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தில் 173 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்பட்டு மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாகம் மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் /அல்லது 2 (1) இ பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல் ;

(ஊ) ஆனந்த பிரேமச்சந்திர ரணவீர அவர்கள் 2011.04.04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இன்று வரைக்குமான கால எல்லைக்குள் மீரிகம பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கும்போது மீரிகம பிரதேச சபைக்கு உரிய புதிய புத்தகசாலை அமைக்கின்ற நிலத்தில் மண் பரவுதல் மற்றும் குப்பைகள் நீக்குதல் தொடர்பான ஒப்பந்தம் அளித்தல் அழைப்பின்றி முறையான சபை உடன்பாடு இன்றி பல்லேவல வள்போலான இலக்கம் 72 இல் வசிக்கும் வை. ஏ. அர்ஜுன தர்மப்பிரிய ஆகிய நபருக்கு ஒப்படைத்து நிறைவேற்றுவதற்கு வழி செய்து முறையான சபை உடன்பாடு இன்றி மீரிகம பிரதேச சபையின் பொது நிதியில் ரூபா மூன்று இலட்சத்து முப்பத்து ஐயாயிரத்து எண்ணூற்று முப்பது (ரூ. 3,35,830 ) அல்லது அதற்கு அண்மித்த நிதியத்தை வழங்கியதன் மூலம் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) ஈ பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்ட குற்றம் செய்தல் ;

(எ) ஆனந்த பிரேமச்சந்திர ரணவீர அவர்கள் 2011.04.04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இன்று வரைக்குமான கால எல்லைக்குள் மீரிகம பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கும்போது மீரிகம பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் வீதி பராமரிப்பு தொடர்பாக மோட்டார் கிரேடர் இயந்திரம் இமேசி கன்ஸ்ரட்க்ஷன்ஸ் நிறுவனத்திலிருந்து மனுக்கோரல் அழைப்பின்றி சேவை தொடர்பாக பெற்றுக்கொண்டதில் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தில் 174 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்பட்டு மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் அல்லது 2 (1) இ பிரவு/பிரிவுகளில் குறிப்பிட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல்.

(ஏ) ஆனந்த பிரேமச்சந்திர ரணவீர அவர்கள் 2011.04.04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இன்று வரைக்குமான கால எல்லைக்குள் மீரிகம பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கும்போது மீரிகம பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் வீதி பராமரிப்பு தொடர்பாக ''இமேசி கன்ஸ்டிரக்ஷன்ஸ்'' நிறுவனத்தினால் மோடர். கிரேடர் இயந்திரம் ஒன்று உபயோகிக்கும்போது ஒப்பந்தமின்றி செயற்பட்டதினால் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபை சட்டத்தில் 173 ஆம் பிரிவிற்கு முரணாக செயற்பட்டு மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்ளூராட்சி நிறுவனங்களின் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) அ மற்றும் அல்லது 2 (1) இ பிரிவு/பிரிவுகளில் குறிப்பிட்ட குற்றம்/குற்றங்கள் செய்தல் ;

(ஐ) ஆனந்த பிரேமச்சந்திர ரணவீர அவர்கள் 2011.04.04 ஆந் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினத்திலிருந்து இன்று வரைக்குமான கால எல்லைக்குள் மீரிகம பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் நடவடிக்கை எடுக்கும்போது மீரிகம பிரதேச சபை அதிகார பிரதேசத்தினுள் வீதி பராமரிப்பு தொடர்பாக மோடர் கிரேடர் இயந்திரம் இமேசி கன்ஸ்ரட்க்ஷன்ஸ் நிறுவனத்தினால் முறையான சபை உடன்பாடு இன்றி சேவை தொடர்பாக ஈடுபடுத்தியதினால் மற்றும்

*அது தொடர்பாக மீரிகம பிரதேச சபையின் பொது நிதியிலிருந்து ரூபா மூன்று இலட்சத்து தொண்ணூற்று ஆராயிரத்து முந்நூறு (ரூ. 3,96,300) அல்லது அதற்கு அண்மித்த நிதியை முறையான சபை உடன்பாடு இன்றி வழங்கியதன் மூலம் மேல் மாகாணத்தில் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களில் நிர்வாக மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தில் 2 (1) ஈ பிரிவில் குறிப்பிட்ட குற்றம் செய்தல்*

மேலும் மேல் மாகாணத்தில் மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் மேற்பார்வை செய்யும் அதிகாரம் தொடர்பான நியதிச் சட்டத்தின் 2 (2) பிரிவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஆணையாளரொருவருக்குரிய அதிகாரங்கள் இந்த தனிநபர் விசாரணை குழுவுக்கு உரித்தாவதோடு, மேலே கூறப்பட்டுள்ள விடயங்களை விசாரணை செய்யும்போது ஏற்புடையதாக்கிக் கொள்ள வேண்டிய எழுத்துமூலம் மற்றும் வாய்மூலமான சாட்சியங்கள் கீழ் உள்ள அட்டவணையுடன் உள்ளடக்கப்பட்டுள்ளதென்று மேலும் அறிவிக்க விரும்புகின்றேன்.

பிரசன்ன ரணதுங்க,
மேல் மாகாண மாகாண சபையின் முதல் அமைச்சர், நிதி மற்றும் திட்டமிடல்,
சட்டம் மற்றும் ஒழுங்கு, காணி, கல்வி உள்ளூராட்சி மற்றும் மாகாண
நிர்வாகம், மின்சக்தி மற்றும் எரிசக்தி, மனிதவலு மற்றும் வேலைவாய்ப்பு
மற்றும் பொருளாதார மேம்பாடு தொடர்பான அமைச்சர்.
மேல் மாகாண மாகாண சபை.

முதலமைச்சர் அலுவலகம்,
மேல் மாகாணம்,
"சிராவஸ்தி மந்திர",
கொழும்பு 7.
2013, சனவரி 17.

**அட்டவணை**

***வாய்மூல சாட்சி :***

1. கம்பஹா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் நுண்ணாய்வு அதிகாரி சம்பத் அவர்கள்.
2. மீரிகம பிரதேச சபையின் செயலாளர் ஆர். பீ. சிறிமான்ன அவர்கள்.
3. மீரிகம பிரதேச சபையின் முன்னால் பதில் செயலாளர் கே. ஏ. குமாரசிங்க அவர்கள்
4. மீரிகம பிரதேச சபையின் சபைக்கான உள்ளக கணக்காய்வு அலுவலர்.
5. மீரிகம பிரதேச சபையின் தொழில்நுட்ப அதிகாரி சீ. ஏ. கே. கால்லகே அவர்கள்.
6. மீரிகம பிரதேச சபையின் கொடுப்பனவு வவுச்சர் சரிபடுத்தும் முகாமைத்துவ உதவியாளர்

***எழுத்துமூல சாட்சி :***

(1) மீரிகம பிரதேச சபையின் கீழ்குறிப்பிடப்பட்ட கொடுப்பனவு வவுச்சர்கள் :-

(i) 2012.01.18 ஆந் திகதி 54 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர் ;
(ii) 2011.12.19 ஆந் திகதி 2390 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர் ;
(iii) 2012.01.23 ஆந் திகதி 97 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(iv) 2011.12.20 ஆந் திகதி 2398 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(v) 2011.07.18 ஆந் திகதி 1276 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(vi) 2011.08.04 ஆந் திகதி 1425 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(vii) 2011.09.19 ஆந் திகதி 1730 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(viii) 2011.10.25 ஆந் திகதி 1946 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(ix) 2011.11.01 ஆந் திகதி 1998 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(x) 2011.11.25 ஆந் திகதி 2232 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(xi) 2011.12.30 ஆந் திகதி 2526 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(xii) 2012.01.30 ஆந் திகதி 129 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்;
(xiii) 2012.02.16 ஆந் திகதி 274 ஆம் இலக்க கொடுப்பனவு வவுச்சர்.

2- 456

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.